මිනිස්බල හා රැකීරක්ෂා දෙපාර්තමේන්තුව

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

**Department of Manpower & Employment**

# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# PERFORMANCE REPORT

# 2016

**Department of Manpower & Employment,**
9th Floor, Sethsirirpaya (Second Phase),
Battaramulla.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

# செயலாற்றுகை அறிக்கை
# 2016

**மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்**
9 ஆம் மாடி, செத்சிறிபாய (இரண்டாம் கட்டம்)
பத்தரமுல்ல.

செயலாற்றுகை அறிக்கை - 2016

**மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்**
9 ஆம் மாடி, செத்சிறிபாய (இரண்டாம் கட்டம்)
பத்தரமுல்ல.

**அச்சிடல்:**
பிரின்டெக் எஸ்டப்ளிஸ்மன்ட் தனியார் கம்பனி
52/1, எக்வத்த வீதி, மிரிகானை, நுகேகொடை.
தொலைபேசி - 0112 815 816/ மின்னஞ்சல sales@printec.lk
இணையத்தளம - www.printec.lk

## தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களது செய்தி

இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் தொழில் அமைச்சர் என்றவகையில் எனக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள கடமைகள் மிகவும் விசாலமானது என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். தொழிலாளர்களின் நலன்களுக்காகவேண்டி சகல வகையிலும் சேவையாற்றுவது என்னுடைய நம்பிக்கையாக அமைந்துள்ளது.

இலங்கையில் வளர்ந்துவருகின்ற, நவீன உலகின், விசேடமாக இளைஞர் சமூகம் உட்பட தொழிற்படையின் பங்களிப்புகளை வினைத்திறன்மிக்கதாக மேம்படுத்தும்வகையில் பிரதானமாகக் கொண்டமைந்த பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை நாம் அமுல்படுத்தி வருகின்றோம். அங்கு மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் மற்றும் ஒத்துழைப்புகள் அத்தியாவசியமாகும்.

எதிர்காலத்தில் தொழிற்படையில் சேர்கின்ற பாடசாலை மாணவர்கள் உட்பட தொழில் வழிகாட்டல் சேவைகளின் மூலம் தொழில் உலகில் பிரவேசிப்பதற்குத் தகுதியான திறன்வாய்ந்தவர்களாக ஆவதற்காக உதவுவதும், தொழிற்படையின் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒத்துழைப்பதும் அரசாங்கம் என்றவகையில் பெறக்கூடிய வெற்றி பாரியதாகும்.

அதேபோல சுயதொழில் நாடுவோரினை பொருளாதார ரீதியாக முறைசாரா அமைப்பில் உள்ள நபர்கள், இனங்கண்ட இலக்குடைய குழுவினர்களுக்கு தொழில் உருவாக்கல் மூலமாக அவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும் நாட்டின் வேலையின்மை வீதத்தைக் குறைக்கவும் வழங்கக்கூடிய பங்களிப்புகள் பாரியதாகும்.

இந்த நாட்டின் தொழிற்படைக்காக ஒரு கொள்கையின்படி அமைந்து அதனை வழிப்படுத்துவதனைப் பிரதானமாகக்கொண்டு தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பலவற்றின் ஒத்துழைப்புகளுடன் அமுல்படுத்தப்படுகின்றது. அந்தப் பணிகளை ஒருங்கிணைக்கின்ற பொறுப்பு இந்தத் திணைக்களத்திற்கு உண்டு.

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைத்திட்டத்திற்கேற்ப ''சகலர்க்கும் தொழிலொன்று'' என்னும் தொணியினை யதார்த்தமுள்ளதாக ஆக்கும்வகையில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பங்களிப்புகளை நான் மிகவும் மெச்சுகின்றேன். அத்துடன் திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள கடமைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குப் பலம் கிட்டவேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

## செயலாளர் அவர்களது செய்தி

2010 இல் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் தொழிற்படையில் சேர்கின்ற இலங்கையின் இளைஞர்களது சுபிட்சத்திற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தி வருகின்றது.

இலங்கை தொழிற்படையின் புதிய போக்குகளின்படி மற்றும் உலகளாவிய தொழில் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான வழிவகைகளைத் தயாரிக்கும்பொருட்டு பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தன்னுடைய பிரதான பணியை திணைக்களமானது மேற்கொண்டு வருகின்றது.

அதேபோல தொழில் உலகில் பிரவேசிக்கின்ற இளைஞர்களின் பயிற்சித் தேவைகளை இனங்காணுதல், அவர்களது இளம் ஆற்றல்களை விருத்திசெய்வதற்காக பயிற்சி நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு அனுப்பும்பொருட்டும் தொழில் வாய்ப்புகளுக்காக அந்தப் பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்புவதற்காகவும் எமது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற முதன்மையான பணிகளாக அமைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ள வேலைவாய்ப்பு சேவை நிலையங்களினூடாக வேலையற்ற இளைஞர்களை தொழிலதிபர்களிடம் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம் மிகவும் வினைத்திறன்மிக்க பணிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதேபோல திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்ற தொழிற்சந்தை நிகழ்ச்சிகளின் மூலமும் வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொழிலதிபர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் அதன்மூலமாக பல இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு இத்திணைக்களத்திற்கு இயலுமாக அமைந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தொழில் உருவாக்கல் மூலம் சுயதொழிலுக்காக ஊக்குவித்தல், கீழ்மட்ட பொருளாதார நிலைமைகளிலுள்ள மற்றும் அவதானத்திற்குட்பட்டவர்களுக்குக் கைகொடுப்பதும் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பிறிதொரு முக்கியமான பணியாக அமைந்துள்ளது. அதன்மூலமாக இளைய தொழில்முயற்சியாளர்களை நாட்டுக்குப் பங்களிப்பதற்கு இயலுமாக அமைந்துள்ளதுடன், அரச தொழில் தேடுவது தங்களுடைய பிரதான குறிக்கோளாக அமைந்துள்ளது என்று கருதுகின்ற இளைஞர்களை புதிய பாதையில் முன்கொண்டுசென்று, இலங்கை சமூகத்தின் மத்தியில் ஏற்கனவே கட்டுண்டிருக்கின்ற மனப்பாங்குகளை ஒருவகையிலாவது மாற்றியமைக்க இயலுமாகியுள்ளமை திணைக்களம் என்றவகையில் நாம் பெற்ற பாரிய வெற்றியாகும்.

பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் வரையில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்திவருகின்ற மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களமானது பெற்றார் மற்றும் ஆசிரியர்களுக்கும் தொழிற்சந்தையின் புதிய போக்குகள் பற்றி விளிப்பூட்டுகின்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்தி வருகின்றன.

தொழிற்சந்தை தகவல்களை ஒன்றுதிரட்டுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள ஒரு பணியாகும் என்பதுடன், வருடாந்தம் பகுப்பாய்வு செய்கின்ற தரவுகளை இத்திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலமும் அச்சுப்பதிப்புக்கள் மூலமாகவும் இலங்கைச் சமூகத்திற்கு விநியோகிக்கப்படுகின்றது.

தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையைத் தயாரித்து அமுல்படுத்துதல் இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள விசேடமான பணியாக அமைந்துள்ளது. புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி கொள்கைத்திட்டத்தின்படி 2016 ஆம் ஆண்டில் மீண்டும் திருத்தியமைக்கப்பட்ட அக்கொள்கைத்திட்டமானது அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பலவற்றின் ஒத்துழைப்புகளுடன் அமுல்படுத்தப்பட்டுவருகின்றது.

அரசாங்கத் திணைக்களம் என்றவகையில் இந்த அனைத்துப் பணிகளையும் மிக வெற்றிகரமான முறையில் மேற்கொள்வதன்மூலம் உலகளாவிய தொழிற்சந்தையிலுள்ள வேலைவாய்ப்புக்களின் பொருத்தப்பாடுகளை அடைவதற்காக இலங்கையின் மனிதவளத்தை அபிவிருத்திசெய்து அப்பணியை முதன்மையான கடமையாக மேற்கொள்வதற்கு மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்திற்கு இயலுமாக அமையும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## பணிப்பாளர் நாயகம் அவர்களது செய்தி

பரந்துபட்ட திறன்களுடன்கூடிய, செயற்றிறனுள்ள மற்றும் உலகளாவிய ரீதியில் போட்டிமிக்க தொழிற்படையொன்றைக் கட்டியெழுப்புதல் மற்றும் எமது மனிதவளத்தின் முழுப்பலத்தையும் இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபடுத்திக்கொள்ளுதல் என்னும் உயர்ந்த குறிக்கோளை அடைவதற்காக 2016 ஆம் ஆண்டில் திணைக்களம் என்றவகையில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் சிறப்பான வெற்றியடைந்தது என்பது எனது கருத்தாகும்.

பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையான சிறுவர், இளைஞர் குழு எமது இலக்குடைய குழுவாக அமைந்திருப்பதால் அவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்களத்தினூடாக அமுல்படுத்தப்படுகின்றது. அதன்கீழ் சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கு 3422 தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டதுடன், அந்த திட்டமிட்ட எண்ணிக்கையை விட 3712 வரை அதிகமான எண்ணிக்கையில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்கால தொழில் உலகில் நுழையும் போக்கில் அவை தொடர்பான 25 விளிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை உள்வாரி மற்றும் வெளிவாரி இளம் பட்டதாரிகளுக்கு நடாத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சிகளின் மூலம் சாதாரண தரத்திலிருந்து தொழில் உலகத்திற்குள் பிரவேசிக்கின்றவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மட்டத்திலிருந்து தொழில் உலகில் பிரவேசிப்பவர்கள் வரை அவர்களுடைய எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்குத் தேவையான தொழில்சார் பாடநெறிகளை, பயிற்சிநெறிகளை, உலகளாவிய தொழில்களின் போக்குகள் பற்றிய பரந்தளவான தெளிவினையும் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. அதன்மூலம் தொழில் உலகத்திற்குத் தேவையான முறையில் மனிதவளத்தைக் கட்டியெழுப்புதல் எமது பிரதான அபிப்பிராயமாகும்.

அதுமாத்திரமன்றி எமது தொழிற்சந்தை நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தொழிலதிபர்கள் மற்றும் வேலையற்ற இளைஞர்களை ஒருவருக்கொருவர் சந்திக்கச் செய்வதன்மூலம் வேலையற்ற இளைஞர்களின் தொழில் விரக்தியை ஓரளவுக்கு குறைப்பதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்குப் பங்களிப்புச் செய்ய முடிந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தொழிற்சந்தை ஊடாக தற்போதைய தொழிற்சந்தை பற்றி ஓரளவு தெளிவினை இளைஞர் யுவதிகளுக்கு வழங்குவதற்கு இயலுமானது. அதேபோல தொழில் நாடுவோர் மற்றும் தொழிலதிபர்கள் எம்முடன் இணையத்தளத்தினூடாக நேரடியாக தொடர்புகொண்டு தேவைக்கேற்ப தொழில்களுக்கு இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்தவும் பயிற்சிநெறிகளுக்கு இளைஞர்களை அனுப்பிவைத்து பயிற்றுவிக்கவும் பிற்பாடு தொழில்களில் ஈடுபடுத்தவும் எம்மால் மேற்கொள்ள இயலுமாக அமைந்தது.

இளைஞர் யுவதிகளை சுயதொழில்களில் ஈடுபடுத்துவதன் மூலம் புதிய தொழில் முயற்சியாளர்களை நாட்டில் உருவாக்குவதற்கு திணைக்களம் என்றவகையில் எம்மால் இயலுமானது. அதன்மூலம் சிறுதொழில் முயற்சியாளர்கள் என்று பலர் வியாபார உலகில் பிரவேசித்துள்ளதால் புதிய தொழிலதிபர்கள் உருவாகியுள்ளனர். அவற்றின் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் முடிந்துள்ளது.

உலகளாவிய மட்டத்திலான இலங்கை தொழிற்படையொன்றை உருவாக்குவதற்காகவேண்டி அவர்களுக்கு கைகொடுக்கின்றவர்களைத் தெளிவுபடுத்துவது அத்தியாவசியமாகும். அதற்காக பெற்றார் மற்றும் ஆசிரியர்களுக்கான விளிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 338 இனை நாடுபூராகவும் நடாத்தப்பட்டது. அவற்றின்மூலமாக பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டு திறமைகளுக்கேற்ப அவர்களின் எதிர்காலத்தை உருவாக்கத் தேவையான அடித்தளத்தை அமைத்துக்கொடுக்கவும் எம்மால் முடிந்தது. தங்களுடைய பிள்ளைகள் பொறியியலாளர்கள், வைத்தியர்களாக ஆகுதல் வேண்டும் என்னும் மனப்பாங்கிலிருந்து விடுபட்டு பிள்ளையின் திறமைகளுக்கேற்ப மின்சார தொழிநுட்பவியலாளர், எழுத்தாளர்கள், வீட்டு அமைப்புத்திட்ட வரைபடக் கலைஞர்கள் போன்ற தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும் உயர் வருமானம் பெறுவதற்கும் இயலுமாகலாம் என்பதைக் காட்டுவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து இடம்பெறுகின்றது.

குறைவருமானம் பெறுகின்ற மற்றும் அவதானத்திற்குட்பட்ட குழுவினர்களை இலக்காகக்கொண்டு ஒழுங்குசெய்கின்ற நிகழ்ச்சிகளின் மூலமாக அவர்களையும் தொழில் உலகில் செயற்றிறனுடன் பங்களிப்புச் செய்பவர்களாக ஆக்குவதற்கும் எம்மால் முடிந்தது. அவ்வாறு எமது திணைக்களத்தினால் 507 தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 17641

நபர்கள் அதன்மூலம் நன்மையடைந்துள்ளனர். தொழில் வழிகாட்டல் பிரிவினால் 4309 நிகழ்ச்சிகளை நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டுள்ளதுடன் 135,527 பேர் அவற்றிலிருந்து நன்மை பெற்றுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாடளாவிய ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பு சேவைகள் நிலையங்களினூடாக 6089 பேர்களை தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் பயிற்சிகளுக்காக 2820 இளைஞர் யுவதிகளையும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதன்படி வேலையின்மையைக் குறைப்பதற்காக எம்மால் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்காள்ளப்பட்டுள்ளது என்பது எனது கருத்தாகும்.

தொழிற்சந்தை தகவல் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற தகவல்களை திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாகவும் அச்சிடல் சாதனங்கள் மூலமாகவும் இலங்கையர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. அவற்றின்மூலம் உலகின் புதிய போக்குகளுடன் தொடர்புடையதாக சமூகத்தைத் தெளிவுபடுத்தவும், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் தகவல்களும் சமூகத்திற்குக் கொண்டுசெல்லப்படுகின்றது. அந்த ஆய்வுகளிலிருந்தான தகவல்கள் திணைக்களத்தின் திட்டமிடல்களுக்கும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதற்கும் பயனுள்ளதாக அமையும்.

தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாயப்புக் கொள்கையைத் தயாரித்து அமுல்படுத்தும் விசேட பணி இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை சட்டகத்தினுள் அடங்கும்வண்ணம் 2016 ஆம் ஆண்டில் மீளத் தயாரிக்கப்பட்ட அக்கொள்கையானது அமைச்சரவை அங்கீகாரத்துடன் அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பலவற்றின் ஒத்துழைப்புகளுடன் அமுல்படுத்தப்படுகின்றது.

அரச நிறுவனம் என்றவகையில் அந்த சகல கடமைகளையும் அர்ப்பணிப்புகளுடன் மேற்கொள்வதற்காக திணைக்களத்தின் அலுவலர் குழாத்திடமிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்புகளை மெச்சுகின்றேன்.

போட்டிமிக்க தொழில் உலகிற்குப் பொருத்தமான மனிதவளத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பிரதான அரச நிறுவனமாகவும், அந்தக் கடமைகளை நன்றாக ஒழுங்கமைத்து, வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

## உள்ளடக்கம்


### 1. அறிமுகம்

1.1 மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்

1.2 கடமைகள் புரிகின்ற விடயப்பரப்பு

1.3 தந்திரோபாய வழிமுறைப் போக்குகள்

1.4 திணைக்களத்தின் போக்கு

1.5 நீண்டகால இலக்குகள்

1.6 திணைக்களத்தின் குறிக்கோள்கள்

1.7 திணைக்களத்தின் பிரிவுகள்

### 2. நிறுவனக் கட்டமைப்பு

2.1 அனுமதிக்கப்பட்டுள்ள, மற்றும் தற்போதுள்ள பதவியணியின் தகவல்கள் - 2016.12.31

2.2 மனிதவள அபிவிருத்தி உதவியாளர்களின் தகவல்களின் சுருக்கம்– 2016

### 3. நிர்வாகப் பிரிவு

3.1 பதவியணியின் தகவல்கள்

3.2 பதவியணியின் பயிற்சி

3.3 நிதி நிர்வாகம் பற்றியசுருக்கம்– 2016

### 4. தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு

4.1 தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

4.2 தொழில் வழிகாட்டல் பிரிவு

4.2.1 ஹஸர சஞ்சிகை

### 5. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு

5.1 தொழிற்சந்தை தகவல் பகுதி

5.2 பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையம் (PES)

5.3 மாவட்ட தொழிற் சந்தையின் முன்னேற்றம்

# 1. அறிமுகம்

## 1.1 மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்

2010.02.12 ஆம் திகதிய 1640/31 ஆம் இலக்க அதி விசேட வர்தமானியிலுள்ள ஒழுங்குவிதிகளின்படி மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் 2010 ஆம் ஆண்டில் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களத்திடம் அரச தொழில் சேவைகளை மேற்கொண்டுவரல் மற்றும் தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கைகளின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 கடமை மேற்கொள் விடையப்பரப்பு

இத் திணைக்களத்தினால் கீழ்க்காணும் வேலைகளைப் புரிவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

- தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள்.
- தொழில் வழிகாட்டல் தொடர்பான நடவடிக்கைகள்.
- தொழிற் சந்தை தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்.
- தொழில் இல்லம் (Jobs Net) மூலம் வழங்கப்படுகின்ற ஏனைய சேவைகள் மற்றும் மேற்படி விடயங்களுடன் இணைந்த மற்றும் தொடர்புபட்ட ஏனைய சேவைகள்.

இவ்வாறே தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையினை அமுல்படுத்தும்போது மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்திடம் முக்கியமான கடமைகள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன.

## 1.3 தந்திரோபாய வழிமுறைகளின் போக்கு

**தொலைநோக்கு**

உலக தரத்திலான ஒரு இலங்கை தொழிற்படை

**பணிப்பிரகடனம்**

பரந்த ஆற்றல்களைக் கொண்ட சுறுசுறுப்பான மற்றும் உலகளாவிய போட்டிமிக்க தொழிற்படையொன்றை உருவாக்குதல் மற்றும் எமது மனிதவளங்களின் மொத்தப் பலத்தை இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக ஈடுபடுத்துதல்.

## 1.4 திணைக்களத்தின் போக்கு

2010 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இத் திணைக்களத்தால் இதுவரை தொழில் வழிகாட்டலுக்கு மற்றும் தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் தொடர்பாக அமுல்படுத்தப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகள் ஊடாக ஏராளமான நன்மை பெறுநர்களுக்குப் பயனைப் பெற்று கொடுத்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொருட்டு வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 1.5 நீண்டகால இலக்குகள்

உலகளாவிய ரீதியில் காணப்படும் போட்டிகரமான மற்றும் சவால்களிடையில் அந் நிலைமைகளுக்குப் பொருத்தமான விதமாக மற்றும் அதற்கு உட்படுகின்ற வகையிலான தொழிற்படையை உருவாக்குவது இத் திணைக்களத்தின் அடிப்படையான பொறுப்பாகும். இதற்கேற்ப உலகளாவிய ரீதியில் இலங்கைக்கான தொழிற்படையை உருவாக்குவதை தொலைநோக்காகக் கொண்ட இத் திணைக்களத்தின் நீண்டகால இலக்குகளைக் கீழ் காணும் விதமாக வகைப்படுத்த முடியும்.

1. உலகளாவிய போட்டிமிக்க, ஆற்றல்களுடைய மற்றும் பல்வகை ஆற்றல்களுடன்கூடிய இலங்கை தொழிற்படையொன்றை உருவாக்குதல்.
2. வேலையின்மையினை குறைக்கும் பொருட்டு பலவிதமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
3. திட்டமிடப்பட்ட, பரிபூரணமான தொழிற்சந்தைத் தகவல் வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

## 1.6 திணைக்களத்தின் குறிக்கோள்கள்

கீழ்காணும் குறிக்கோள்களை மேற்கொள்வதன் மூலம் மேற்படி இலக்குகளை அடையலாம்.

1. தேசிய மனிதவள கொள்கையை உருவாக்கி, அதனுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளை அமுலாக்குதல்.
2. ஆற்றல்கள் ஒத்திருக்காமை என்னும் அமைப்பு ரீதியான வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தல்.
3. நிகழ்காலத்து தொழிற்படைக்குரிய மற்றும் எதிர்கால தொழிற் சந்தைக்குள் பிரவேசிக்கக்கூடிய சகல இலங்கையர்களும் சரியான தொழில்துறையைத் தீர்மானித்துக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
4. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முன்னறிவித்தல்.
5. முறைசாரா துறையை அபிவிருத்தி செய்தல்.
6. தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்காக தொழில் நாடுவோரை ஊக்குவித்தல்.
7. சுயாதீன வேலைவாய்ப்பு சேவைகளை வழங்குதல்.
8. அவதானத்திற்கு உட்பட்டுள்ள குழுக்கள், அங்கவீனர்கள் மற்றும் குறைவாக அபிவிருத்தி அடைந்திருக்கும் பகுதிகளில் வாழ்கின்ற நபர்கள் தொடர்பாக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புகள் சம்பந்தமான வசதிகளை வழங்குதல்.
9. உலக மற்றும் உள்நாட்டு ரீதியாக சரியான தொழிற் சந்தை தகவல்களை அனைத்து இலங்கையர்களுக்கும் பெற்றுக் கொடுத்தல்.
10. உள்நாட்டு மற்றும் உலக தொழிற் சந்தைப் போக்குகளை முன்னறிவிப்புச் செய்தல்.


இவ்வாறாக வேலையின்மையை குறைத்தல் மற்றும் சிறந்த தொழில்களை ஏற்படுத்துதல் எனும் நற்பணிகளை நிறைவேற்றும் பொருட்டு இத் திணைக்களம் தமது மனிதவளங்களைப் பயன்படுத்தி பல்வேறு நிகழ்ச்சிகளை அமுல்படுத்துகின்றது.

## 1.7 திணைக்களத்தின் பிரிவுகள்

- நிர்வாகப் பிரிவு
- கணக்குப் பிரிவு
- மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு
    - தொழிற் சந்தை தகவல் பகுதி
    - பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை
- தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு.

.

## 2. நிறுவனக் கட்டமைப்பு




1. கிராமிய வேலைவாய்ப்பு மற்றும் நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம்
2. முறைசாராத் துறையில் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சி
3. தொழில்வான்மை அபிவிருத்தி நிகழ்ச்சி
4. தொழிற் குழு நிகழ்ச்சி

1. தொழில் வழிகாட்டல் தகவல் வலையமைப்பினை உருவாக்கல் / விநியோகித்தல்
2. தொழில் வழிகாட்டல் கல்வி / ஆராய்ச்சிகள்
3. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல்

1. நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல்
2. கள நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு
3. புதிய நிகழ்ச்சிகளை இனங் காணல் / திட்டமிடுதல்.

1. பொது நிர்வாகம்
2. பணியாளர் மற்றும் நிறுவன நடவடிக்கைகள்.
3. திணைக்களத்தின் போக்குவரத்து நடவடிக்கைகள்
4. களஞ்சிய சேவை
5. நலன்புரி சேவைகள்

1. வருடாந்த திட்டங்களையும் மற்றும் அறிக்கைகளையும் தயாரித்தல்
2. பணியாளர் அபிவிருத்தி
3. முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள்
4. ஏனைய பிரிவுகளுடனான ஒருங்கிணைப்பு
5. திணைக்கள வெளியீடுகள்

1. தொழிற் சந்தை போக்குகள் பற்றிய ஆய்வு
2. தொழிற் சந்தை தகவல்களை சேகரித்தல்
3. பகுப்பாய்வு செய்தல் மற்றும் விநியோகித்தல்.

1. மனிதவள முன்னறிவிப்புச் செய்தல்
2. துறைசார் மனிதவள திட்டமிடல்
3. தொடர்புபட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு ஊடாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. மனிதவள அபிவிருத்திக்கு உரிய கொள்கைகள் மற்றும் பிரேரணைகளை அமுல்படுத்துதல்.

1. தேசிய வேலைவாய்ப்பு சேவை வலையமைப்பு ஒன்றை அமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
2. வேலைவாய்ப்பு சேவை வழங்கும் நிறுவனங்களிடையிலான தொடர்புகள்
3. தொழிற் சந்தை

1. திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள்

## 2.1 அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் நிலையான ஆளணி பற்றிய தகவல்கள் 2016.12.31

| தொடர் இல. | பதவி | உரிய சேவை | அங்கீகரிக்க ப்பட்டுள்ள ஆளணியின் எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | வெற்றிடங் களின் எண்ணிக்கை க |
|---|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | இ.நி.சே. (விசேட) | 1 | 1 | 0 |
| 2 | பணிப்பாளர் (நிர்வாகம்) | இ.நி.சே.I | 1 | 0 | 1 |
| 3 | பணிப்பாளர் (தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.நி.சே. I | 1 | 1 | 0 |
| 4 | பணிப்பாளர் (மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.நி.சே. I | 1 | 1 | 0 |
| 5 | பிரதம கணக்காளர் | இ.க.சே. I | 1 | 1 | 0 |
| 6 | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | இ.நி.சே. II/ III | 2 | 1 | 1 |
| 7 | உதவி பணிப்பாளர் (மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.நி.சே.II/ III | 2 | 1 | 1 |
| 8 | உதவி பணிப்பாளர் (தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.நி.சே.II/ III | 2 | 1 | 1 |
| 9 | உதவி பணிப்பாளர் (மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.தி.சே. II/ III | 1 | 1 | 0 |
| 10 | உதவி பணிப்பாளர் (தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.தி.சே. II/ III | 1 | 1 | 0 |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.சே. அதி | 1 | 0 | 1 |
| 12 | மொழி பெயர்ப்பாளர் | மொழி பெயர்ப்பாளர் சேவை 1/11 | 1 | 0 | 1 |
| 13 | தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் | இணைந்த சேவை | 85 | 33 | 52 |
| 14 | கருத்திட்ட உத்தியோகத்தர் | இணைந்த சேவை | 3 | 3 | 0 |
| 15 | மனிதவள அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவை | 570 | 488 | 82 |
| 16 | பொது முகாமைத்துவ உதவியாளர் | பொ.மு.சே. I II, III | 15 | 14 | 1 |
| 17 | சாரதி | சாரதி சேவை | 8 | 7 | 1 |
| 18 | அலுவலக உதவியாளர் | அ.உ.சே. II/III. | 7 | 4 | 3 |
|  | மொத்தம் |  | **703** | **558** | **145** |

## 2.2 மனிதவள அபிவிருத்தி உதவியாளர்களின் தகவல்களின் சுருக்கம் - 2016

| மாவட்டம் | பிரதேச செயலக ங்களின் எண்ணிக் கை | பிரதேச ரீதியில் இணைக்கப் பட்டுள்ள எண்ணிக்கை க | மாவட்ட ரீதியில் இணைக்கப் பட்டுள்ள எண்ணிக்கை க | முழு மொத்தம் | பிரதேச ரீதியிலான வெற்றிடங் களின் எண்ணிக் கை | மாவட்ட ரீதியிலான வெற்றிடங் களின் எண்ணிக் கை | மேலதி க எண்ண ிக்கை | வெற்றிடங்க ளின் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 19 | 20 | 6 | 26 | 0 | 0 | 1 | 0 |
| அனுராதபுரம் | 22 | 16 | 7 | 23 | 6 | 0 | 0 | 6 |
| பதுளை | 15 | 10 | 3 | 13 | 5 | 0 | 0 | 5 |
| மட்டக்களப்பு | 14 | 14 | 8 | 22 | 0 | 0 | 0 | 0 |
| கொழும்பு | 13 | 12 | 5 | 17 | 1 | 0 | 0 | 1 |
| காலி | 19 | 22 | 12 | 34 | 0 | 0 | 3 | 0 |
| கம்பஹா | 13 | 16 | 12 | 28 | 0 | 0 | 3 | 0 |
| அம்பாந்தோட்டை | 12 | 12 | 16 | 28 | 0 | 0 | 0 | 0 |
| யாழ்ப்பாணம் | 15 | 14 | 7 | 21 | 1 | 0 | 0 | 1 |
| கண்டி | 20 | 20 | 14 | 34 | 1 | 0 | 0 | 1 |
| கேகாலை | 11 | 13 | 12 | 25 | 0 | 0 | 2 | 0 |
| களுத்துறை | 14 | 14 | 12 | 26 | 0 | 0 | 0 | 0 |
| குருநாகல் | 30 | 36 | 13 | 49 | 0 | 0 | 6 | 0 |
| மாத்தறை | 16 | 18 | 13 | 31 | 0 | 0 | 2 | 0 |
| மாத்தளை | 11 | 9 | 9 | 18 | 2 | 0 | 0 | 2 |
| மொனறாக்கலை | 11 | 11 | 6 | 17 | 0 | 0 | 0 | 0 |
| நுவரெலியா | 5 | 4 | 1 | 5 | 1 | 0 | 0 | 1 |
| புத்தளம் | 16 | 13 | 4 | 17 | 4 | 0 | 0 | 4 |
| பொலன்னறுவை | 7 | 5 | 4 | 9 | 2 | 0 | 0 | 2 |
| இரத்தினபுரி | 17 | 18 | 6 | 24 | 0 | 0 | 1 | 0 |
| திருகோணமலை | 11 | 7 | 5 | 12 | 4 | 0 | 0 | 4 |
| வவுனியா | 4 | 4 | 2 | 6 | 0 | 1 | 0 | 1 |
| மன்னார் | 5 | 3 | 2 | 5 | 2 | 0 | 0 | 2 |
| கிளிநொச்சி | 4 | 3 | 5 | 8 | 1 | 0 | 0 | 1 |
| முல்லைத்தீவு | 6 | 0 | 2 | 2 | 6 | 0 | 0 | 6 |
| **மொத்தம்** | **330** | **314** | **186** | **500** | **36** | **1** | **18** | **37** |

# 3. நிர்வாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவின் கீழ் பின்வரும் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

I. நிறுவனப் பிரிவு

II. திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் பிரிவு

திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு உள்ளக நிர்வாக செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பதன்மூலம் உன்னதமான செயலாற்றல்களை அடைந்துகொள்வதற்காக திணைக்களத்தின் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு ஒத்துழைத்தல், நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்து மதிப்பீடுசெய்வதல், மேம்படுத்துதல் நிர்வாகப் பிரிவிற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான கடமைகளாகும். அதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் தரத்தினைப் பேணிச்செல்வதற்காக பயனுள்ள, பௌதீக ரீதியான அபிலாஷைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் பொருத்தமான உயர்தரம்மிக்க பணியாட் தொகுதியினரை உருவாக்கவும், பிரிவுகளினிடையே சிறந்த, முறையான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல், பணியாட்டொகுதியின் நலன்களை மேம்படுத்துவதற்கும் ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கும் நிர்வாகப் பிரிவிற்கு கடமை பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

### 3.1 ஆளணி பற்றிய தகவல்கள்

3.1.1 பதவிநிலை உத்தியோகத்தர்களைப் புதிதாகச் சேர்த்தல்

| *தொடர் இல.* | பெயர் | பதவி | சேவையில் சேர்ந்த திகதி |
|---|---|---|---|
| 1 | திரு.ஈ.எல்.கே. திசாநாயக்க | பணிப்பாளர் (நிர்வாகம்) | 2016.02.02 |

3.1.2 பதவிநிலை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள்

இந்த ஆண்டில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெறவில்லை.

### 3.2 பணியாளர்களுக்கான பயிற்சி

மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அலுவலர்களை 2016 ஆம் ஆண்டில் கீழ்வரும் பயிற்சிநெறிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டனர்.

| தொடர் இல. | பாடநெறியின் /நிகழ்ச்சியின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி | செலவு |
|---|---|---|---|
| 1 | Certificate course in English for employment purposes Batch II | 2016.01.17 | 50,000.00 |
| 2 | கற்றல் பலவீனமான பிள்ளைகளுக்கு கற்பித்தல் தொடர்பான குறுங்கால பயிற்சிநெறி | 2016.02.29 | 16,000.00 |
| 3 | உளவியல்சார் பயிற்சிநெறி | 2016.06.06 | 3800.00 |
| 4 | இரண்டுநாட்கள் தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி | 2016.06.20 | 72,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சி | 2016.04.02,03 හා 2016.05.13,14 | 816,000.00 |
| 6 | முதுகலைமாணிப் பட்டப் பாடநெறி (சமூக விஞ்ஞானம்) | 2016.01.11 | 34,750.00 |
| 7 | Post-Graduate Diploma of Counselling | 2016.03.01 | 225,000.00 |
| 8 | முதுகலைமாணிப் பட்டப் பாடநெறி (பொருளியல்) | 2016.03.01 | 50,000.00 |
| 9 | உயர் தொழில் உற்பத்தித்திறனுக்காக அலுவலக உதவியாளர்களின் கடமைப் பொறுப்புக்கள் | 2016.07. 12 | 12,000.00 |
| 10 | Forecasting Techniques பயிற்சிநெறி | 2016.01.26 | 150,000.00 |
| 11 | தகவல் தொழிநுட்பம் தொடர்பான பொருட்களைக் கொள்வனவு செய்யும் கேள்வி நடைமுறைகள் மற்றும் மதிப்பிடல் பற்றிய செயலமர்வு | 2016.03.14 | 8,500.00 |
| 12 | அலுவலக முறைமை மற்றும் கோவைகள் முகாமை செய்தல் | 2016.08.08 | 180,000.00 |
| 13 | சாரதி பயிற்சிநெறி | 2016.07.21 - 2016.08.03 | 15,000.00 |
| 14 | Advance Time Series Forecasting பயிற்சிப் பாடநெறி | 2016.08.25 | 70,000.00 |
| 15 | National Diploma in Career Guidance – 2016 - 2017 | 2016.09.21 | 37,500.00 |
| 16 | கிராமிய மட்டத்தில் புதிய தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் பயிற்சிநெறி | 2016.09.26 | 12,500.00 |
| 17 | ஆங்கில சான்றிதழ் பாடநெறியின் 02 மற்றும் ஆவது தவணைகளுக்காக கொடுப்பனவுசெய்தல் | 2016.11.01 | 50,000.00 |
| 18 | சமூக விஞ்ஞானத்தில் முதுகலைமாணிப் பட்டப் பாடநெறி 2016 - 2017 | 2016.11.09 | 35,000.00 |
| 19 | அலுவலக முறைமை மற்றும் கோவைகள் முகாமை செய்தல் | 2016.11.06 | 1,800.00 |

### *3.4 நிதி நிர்வாகச் சுருக்கம் – 2016*

**செலவீனத் தலைப்பு – 328**

| | ஒதுக்கீடு (ரூபா.000) | செலவீனம் (ரூபா.000) | மீதம் (ரூபா.000) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவுகள் | 330,450 | 328,829 | 1,621 |
| மூலதன செலவுகள் | 33,700 | 31,738 | 1,962 |
| மொத்தம் | **364,150** | **360,567** | **3583** |


## 4. தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு

இளைஞர் வேலைவாய்ப்புப் பிரிவு என்று 1997 ஆம் ஆண்டில் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவு 2010 ஆம் ஆண்டில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் ஸ்தாபிக்கப்படுகின்றபோது இத்திணைக்களத்தின்கீழ் உருவாக்கப்பட்டது.

தொழில் வழிகாட்டல், தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் பிரவினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு மற்றும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஒட்டுமொத்த இலங்கை தொழிற்படையினை முறையான தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அதேபோல தேசிய கொள்கைத்திட்டம் மற்றும் தனிநபர் ஆற்றல்களுக்கும் திறமைகளுக்குமேற்ப தொழில்களை விரிவுபடுத்துவதற்கும் போன்ற பரந்துபட்ட கடமைப்பொறுப்புக்களை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கடமைகளை ஆற்றுவதற்காக இப்பிரிவினை இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அப்பகுதிகளை உதவிப் பணிப்பாளர் ஒருவரின் வழிகாட்டலின்கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கை பூராகவும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டங்களைக் கீழ்மட்டத்திற்குக் கொண்டுசெல்லப்படுகின்றது.

தொழிலிலற்ற மற்றும் புதிதாக தொழிற் சந்தையில் நுழைகின்ற மற்றும் எதிர்காலத்தில் நுழையவிருக்கின்ற மக்களிடம் வேவைாய்ப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 2016 ஆம் ஆண்டில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தியது.



## 4.1 தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

2016 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரையான காலத்தினுள் களத்தில் நடாத்தப்பட்ட தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சியின் பெயர் | மதிப்பீடு ரூ.மி | செலவீனம் ரூ.மி. | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | இலக்குகள் | முன்னேற்றம் | |
| தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சிநெறி | 0.71 | 0.6816 | 25 | 53 | 1818 |
| தொழிற்குழு நிகழ்ச்சி | 0.85 | 0.8389 | 25 | 25 | 750 |
| 100 வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.59 | 0.4035 | 10 | 13 | 2076 |
| தேவைப்பாட்டின் மீதான பயிற்சி நெறி | 2.17 | 2.1730 | 219 | 328 | 9670 |
| பூங்காவன அலங்கார முகாமைத்துவ நிகழ்ச்சி | 0.094 | 0.0778 | 3 | 3 | 100 |
| சுயாதீன தொழில் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.087 | 0.0997 | 6 | 10 | 308 |
| சுற்றுலாத் துறையில் தொழில்வாய்ப்புக்கள் பற்றி விளிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.1662 | 0.1148 | 6 | 5 | 261 |
| அவதானத்திற்குட்பட்டவர்களை தொழிலிலமர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.1987 | 0.1988 | 25 | 22 | 918 |
| தொழில்முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி | | | | 2 | - |
| விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | | 0.5437 | | 46 | 1740 |
| மொத்தம் | **4.8659** | **5.1318** | **319** | **507** | **17,641** |

## 4.2 தொழில் வழிகாட்டல் பிரிவு

**தொழில் வழிகாட்டல்** ⟺ **தொழில்சார் ஆலோசனை** ⟺ **தொழில் உளவளத்துணை**

தொழில் வழிகாட்டல், நபர்களின் தொழில்சார் வாழ்க்கை மற்றும் அதன் அபிவிருத்தியினை வெற்றிக்கரமான முறையில் முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு உதவும். தொழில் பெற்றோர்களின் மனப்பாங்கு வளர்ச்சி, வினையூக்கம் மற்றும் தேவையான அறிவை முன்னேற்றிடும் நோக்கத்துடன் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் திசெம்பர் இறுதி வரையான காலத்தினுள் துறையினுள் நடாத்தப்பட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சி | மதிப்பீடு ரூ.மி | செலவீனம் ரூ.மி. | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | இலக்குகள் | முன்னேற்றம் | |
| க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள். | 0.93 | 0.8707 | 1951 | 2274 | 66048 |
| க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள். | 0.80 | 0.7824 | 1471 | 1438 | 42553 |
| சுயதொழிலுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சி | 0.20 | 0.1720 | 60 | 139 | 4219 |
| தொழில் சவாலை வெற்றி கொள்ளல் நிகழ்ச்சி | 0.53 | 0.5124 | 60 | 81 | 2795 |
| இளம் பட்டதாரிகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் (உள்வாரி) | 0.46 | 0.2758 | 12 | 8 | 317 |
| இளம் பட்டதாரிகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் (வெளிவாரி) | 0.46 | 0.5328 | 12 | 17 | 1066 |
| ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் | 1.05 | 0.8829 | 35 | 48 | 1624 |
| பெற்றோர்களுக்கான விளிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 0.68 | 0.4262 | 150 | 290 | 14370 |
| தொழில் வழிகாட்டி நிகழ்ச்சி | 0.19 | 0.1437 | 08 | 12 | 2535 |
| ஹஸர சஞ்சிகை | 0.50 | 0.3185 | 04 | 02 | |
| **மொத்தம்** | **5.8** | **4.9174** | **3,763** | **4,309** | **135,527** |

### 4.2.1. ஹஸர சஞ்சிகை

ஹஸர தொழில் வழிகாட்டல் மற்றும் கல்வி சஞ்சிகை வெளியீடு 2000 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுவருகின்றது. அத்துடன் இந்த விடயம் தொடர்பாக சிங்கள மொழிமூலத்தில் வெளிவருகின்ற முதலாவது சஞ்சிகை இதுவாகும். இச் சஞ்சிகையானது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், நகர சபைகள் ஊடாக நிர்வகிக்கப்படுகின்ற நூலகங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. சஞ்சிகைக்குரிய ஆக்கங்களைத் தயாரிக்கும் பணி திணைக்களத்தில் அந்த விடயத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் தொழில் வழிகாட்டல் விடயத்துடன் தொடர்புடைய நிபுணத்துவமுடையோர் மற்றும் நேரடி கலந்துரையாடல்கள் மூலமாகவும் இடம்பெற்று வருகின்றது. திணைக்களத்தின் கடமைகளுடன் தொடர்புடையதாக ஆக்கங்களை வெளியிடும்போது விசேட கவனம்செலுத்தப்படுகின்றது.

I. தொழில் வழிகாட்டல் விடயத்திற்குரிய ஆக்கங்கள்
II. தொழில் உலகின் புதிய போக்குகள்
III. தொழில் துறைகள் மற்றும் தொழில் தகுதிகள் பற்றிய விளக்கம்
IV. வெற்றிகரமான தொழிலாளராக அமைந்து நாட்டின் நற்பெயரைக் காத்த நபர்களுடனான நேர்முக கலந்துரையாடல்கள் மூலம் தயாரித்த ஆக்கங்கள்
V. பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுக்கின்ற அவற்றுக்குரிய ஆக்கங்கள்

## 5. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு

### 5.1 தொழிற் சந்தை தகவல் பகுதி

சர்வதேச தொழிற்சந்தை வலையமைப்பில் இலங்கை பங்குதாரர் என்றவகையில் வினைத்திறன் மற்றும் பயனுறுதிவாய்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தேவையான தொழிற்சந்தை தகவல்களைப் பயன்படுத்தி வசதியான முறையில் சகல தரப்பினர்களுக்கும் வழங்கிவைப்பதற்காக உருவாக்கப்பட்ட பிரிவாகும்.

| தொடர் இல. | உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் | அமுல்படுத்திய நிகழ்ச்சிகள் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | தொழில் விபரத்திரட்டு தயாரித்தல்<br>• சுகாதாரத் துறையில் தொழில் விபரத்திரட்டு | தொழில் விபரத்திரட்டு தயாரித்தல்<br>• சுகாதாரத் துறையில் தொழில் விபரத்திரட்டு | 100 % |
| | • துறைமுகம் மற்றும் கடற்றொழில் துறையில் தொழில் விபரத்திரட்டு | • துறைமுகம் மற்றும் கடற்றொழில் துறையில் தொழில் விபரத்திரட்டு | 100 % |
| 02 | மாவட்ட மட்டத்தில் தொழில்களில் ஈடுபடுவோரின் தகைமைகளைப் பரீட்சித்தல்<br>• களுத்துறை மாவட்டம் | மாவட்ட மட்டத்தில் தொழில்களில் ஈடுபடுவோரின் தகைமைகளைப் பரீட்சித்தல்<br>• களுத்துறை மாவட்டம் | 100 % |
| | • பதுளை மாவட்டம் | • பதுளை மாவட்டம் | 75 % |
| | • மட்டக்களப்பு மாவட்டம் | • மட்டக்களப்பு மாவட்டம் | 85 % |
| | • வவுனியா மாவட்டம் | • வவுனியா மாவட்டம் | 90 % |
| | • மன்னார் மாவட்டம் | • மன்னார் மாவட்டம் | 80 % |
| | • காலி மாவட்டம் | • காலி மாவட்டம் | 65 % |
| 03 | முறைசாரைத் துறை தொழில்களில் ஈடுபடுவோர் பற்றிய ஆய்வு | முறைசாரைத் துறை தொழில்களில் ஈடுபடுவோர் பற்றிய ஆய்வு | 100 % |
| 04 | சமூக, பொருளாதார தகவல் கையேடு | சமூக, பொருளாதார தகவல் கையேடு | 95 % |
| 05 | பத்திரிகை விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு | பத்திரிகை விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு | 100 % |
| 06 | தொழிற்சந்தையில் நிலவுகின்ற தொழில் கோரிக்கைகள் மற்றும் வழங்கல் இடையேயான ஆற்றல் பொருத்தப்பாடின்மை பற்றிய ஆய்வு<br>• கல்வித் துறை | தொழிற்சந்தையில் நிலவுகின்ற தொழில் கோரிக்கைகள் மற்றும் வழங்கல் இடையேயான ஆற்றல் பொருத்தப்பாடின்மை பற்றிய ஆய்வு<br>• கல்வித் துறை | 100 % |
| | • போக்குவரத்துத் துறை | • போக்குவரத்துத் துறை | 100 % |
| | • உற்பத்தித் துறை | • உற்பத்தித் துறை | 85 % |
| | • தொழில்நுட்பத் துறை | • தொழில்நுட்பத் துறை | 80 % |

### 5.2 பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையங்கள் (PES)

அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்புகளுடன் அமைந்த செயற்றிட்டமொன்றாக 2003 ஆம் ஆண்டு இல.அப/03/0874/130/23 EPD/464 மற்றும் 2003.10.15 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின்படி வேலைவாய்ப்பு சேவைகள் வலையமைப்பு (தொழில் இல்லம்) நிருவப்பட்டது. தேசிய வேலைவாய்ப்பு கொள்கைத்திட்டத்தின் விதந்துரைகளை அமுல்படுத்தவதற்காக தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சின்கீழ் இந்த நிறுவனம் விரிவான முறையில் கணனி வலையமைப்பினூடாக அடையும் வகையில் சகல நிலையங்களும் ஒன்றிணைக்கப்பட்டன. ஆரம்பத்தில் வெளிநாட்டு உதவித்திட்டமாக இயங்கிய இச்செயற்றிட்டம் 2007.01.31 ஆம் திகதி வரையும் அமுல்படுத்தப்பட்டது. அதன்பிற்பாடு தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சினால் 2007.01.24 ஆம் திகதிய இல.2/2007 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கேற்ப அமைச்சரவை அங்கீகாரத்தின்படி இலங்கை தொழில் இல்லம் என்னும் பெயரில் வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவுசெய்யப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் அந்த விடயப்பரப்பு தொழில் உறவுகள் மற்றும் உற்பத்தித்திறன்

| தொடர் இல. | உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் | அமுல்படுத்திய நிகழ்ச்சிகள் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | தொழில் விபரத்திரட்டு தயாரித்தல்<br>• சுகாதாரத் துறையில் தொழில் விபரத்திரட்டு | தொழில் விபரத்திரட்டு தயாரித்தல்<br>• சுகாதாரத் துறையில் தொழில் விபரத்திரட்டு | 100 % |
| | • துறைமுகம் மற்றும் கடற்றொழில் துறையில் தொழில் விபரத்திரட்டு | • துறைமுகம் மற்றும் கடற்றொழில் துறையில் தொழில் விபரத்திரட்டு | 100 % |
| 02 | மாவட்ட மட்டத்தில் தொழில்களில் ஈடுபடுவோரின் தகைமைகளைப் பரீட்சித்தல்<br>• களுத்துறை மாவட்டம் | மாவட்ட மட்டத்தில் தொழில்களில் ஈடுபடுவோரின் தகைமைகளைப் பரீட்சித்தல்<br>• களுத்துறை மாவட்டம் | 100 % |
| | • பதுளை மாவட்டம் | • பதுளை மாவட்டம் | 75 % |
| | • மட்டக்களப்பு மாவட்டம் | • மட்டக்களப்பு மாவட்டம் | 85 % |
| | • வவுனியா மாவட்டம் | • வவுனியா மாவட்டம் | 90 % |
| | • மன்னார் மாவட்டம் | • மன்னார் மாவட்டம் | 80 % |
| | • காலி மாவட்டம் | • காலி மாவட்டம் | 65 % |
| 03 | முறைசாரைத் துறை தொழில்களில் ஈடுபடுவோர் பற்றிய ஆய்வு | முறைசாரைத் துறை தொழில்களில் ஈடுபடுவோர் பற்றிய ஆய்வு | 100 % |
| 04 | சமூக, பொருளாதார தகவல் கையேடு | சமூக, பொருளாதார தகவல் கையேடு | 95 % |
| 05 | பத்திரிகை விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு | பத்திரிகை விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு | 100 % |
| 06 | தொழிற்சந்தையில் நிலவுகின்ற தொழில் கோரிக்கைகள் மற்றும் வழங்கல் இடையேயான ஆற்றல் பொருத்தப்பாடின்மை பற்றிய ஆய்வு<br>• கல்வித் துறை | தொழிற்சந்தையில் நிலவுகின்ற தொழில் கோரிக்கைகள் மற்றும் வழங்கல் இடையேயான ஆற்றல் பொருத்தப்பாடின்மை பற்றிய ஆய்வு<br>• கல்வித் துறை | 100 % |
| | • போக்குவரத்துத் துறை | • போக்குவரத்துத் துறை | 100 % |
| | • உற்பத்தித் துறை | • உற்பத்தித் துறை | 85 % |
| | • தொழில்நுட்பத் துறை | • தொழில்நுட்பத் துறை | 80 % |

மேம்படுத்தல் அமைச்சின்கீழ் அமைக்கப்பட்ட மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்திடம் பொறுப்பாக்கப்பட்டது. உற்பத்தித்திறன் மேம்படுத்தல் அமைச்சின் கௌரவ அமைச்சரினால் தொழில் இல்லத்தை மறுசீரமைக்கும் வகையில் முன்வைக்கப்பட்ட இல.03/2011 மற்றும் 2011.02.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின்படி அதில் குறிப்பிடப்படுகின்ற விடயங்களுக்காக 2011.05.12 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

6/2011 இன் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குக் கிடைத்த அங்கீகாரங்களுக்கேற்ப கூட்டிணைக்கப்பட்ட பிணை நிறுவனமாக இருந்து வந்த மாவட்ட தொழில் இல்லங்கள் Jobs Net மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின்கீழ் சுவீகரிக்கப்பட்டன. அதன்பிற்பாடு திணைக்களத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகள் நிலையத்திற்கு தொழில் இல்லத்திடமிருந்த பௌதீக வளங்கள் சுவீகரிக்கப்பட்டன. அவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு சேவை நிலையங்கள் இயங்குகின்ற நிலைமையில் மேற்கொண்டுசென்று திணைக்களத்தின் குறிக்கோளை அடைவதற்காக பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகளை முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

2016 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரையான காலப் பகுதியினுள் பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையங்களின் பௌதீக முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| மாவட்டம் | தொழில் நாடுவோரி னைப் பதிவுசெய் தல் | தாழில் வெற்றிடங் களைப் பதிவுசெய் தல். | தொழில் பொருத்தப் பாடுகள் | தொழிலில் ஈடுபடுத்து தல் | பயிற்சிக ளுக்கு அனுப்பு தல் |
|---|---|---|---|---|---|
| அம்பாறை | 3,982 | 339 | 186 | 146 | 149 |
| அனுராதபுரம் | 751 | 669 | 819 | 225 | 135 |
| பதுளை | 538 | 1,171 | 1,549 | 84 | 89 |
| மட்டக்களப்பு | 7,408 | 2,006 | 2,420 | 210 | 32 |
| மொழும்பு | 2,456 | 3,574 | 3,352 | 460 | 83 |
| காலி | 2,456 | 413 | 1,403 | 271 | - |
| கம்பஹா | 1,251 | 2,000 | 1,271 | 359 | 15 |
| அம்பாந்தோட்டை | 1,681 | 1,010 | 1,413 | 261 | 173 |
| யாழ்ப்பாணம் | 281 | 1,912 | 2,231 | 494 | 10 |
| களுத்துறை | 1,475 | 1,836 | 626 | 270 | 291 |
| கண்டி | 2,161 | 472 | 706 | 297 | 299 |
| கேகாலை | 3,995 | 2,901 | 956 | 371 | 30 |
| கிளிநொச்சி | 1,992 | 111 | 265 | 59 | 45 |
| குருநாகல் | 4,101 | 959 | 4,338 | 527 | 127 |
| மன்னார் | 2,366 | 689 | 1,246 | 28 | 223 |
| மாத்தளை | 382 | 423 | 256 | 185 | 118 |
| மாத்தறை | 2,270 | 2,645 | 1,554 | 428 | 44 |
| மொனறாகலை | 1,123 | 1,248 | 316 | 67 | - |
| பொலனறுவை | 1,225 | 521 | 474 | 64 | 250 |
| புத்தளம் | 1,056 | 496 | 495 | 140 | 35 |
| இரத்தினபுரி | 3,875 | 1,125 | 3,241 | 879 | 362 |
| திருகோணமலை | 1,305 | 423 | 684 | 105 | 63 |
| வவுனியா | 2,236 | 323 | 2,232 | 143 | 247 |
| முல்லைத்தீவு | 1,123 | 87 | 109 | 16 | - |
| **மொத்தம்** | **51,489** | **27,353** | **32,142** | **6,089** | **2,820** |

## 5.3 மாவட்ட தொழிற் சந்தை நிகழ்ச்சிகளின் முன்னேற்றம்

| மாவட்டம் | பங்குபற்றியோரின் எண்ணிக்கை | செலவீனம் |
|---|---|---|
| களுத்துறை – மத்துகமை | 1520 | 170,925.00 |
| பதுளை | 2178 | 204,308.90 |
| மட்டக்களப்பு | 2201 | 483,753.87 |
| வவுனியா | 1642 | 397,987.87 |
| மன்னர் | 1264 | 409,669.87 |
| பதுளை - வெலிமடை | 1348 | 92,100.00 |
| இரத்தினபுரி | 2223 | 196,300.00 |
| **மொத்தம்** | **12,376** | **1,955,045.51** |






மாவட்ட தொழிற்சந்தை - இரத்தினபுரி தர்மபால வித்தியாலயம் (2016.09.25)





தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சிநெறி

குருவிட பிரதேச செயலகம் 2016.05.24 - 2016.05.27





தொழிற்குழு நிகழ்ச்சி - கொழும்பு மாவட்ட செயலகம் 2016.06.27 - 2016-07-01





க.பொ.த. சா.த பாடசாலை தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி




மன்னார் உயிலங்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம் 2016.09.22




தேவைப்பாட்டின்மீதான பயிற்சி நிகழ்ச்சி





காத்தான்குடி பிரதேச செயலகம் - சந்தைப்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் 2016.09.29

ஆசிரியர்களை விளிப்பூட்டும் நிகழ்ச்சி






மாவட்ட பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகள் நிலையம் திறந்துவைத்தல் நிகழ்வுகள்





அம்பாறை பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகள் நிலையம் - 2016.10.03




இரத்தினபுரி பொதுமக்கள் வேலைவாய்ப்பு
சேவைகள் நிலையம் - 2016.02.01



பொலனறுவை பொதுமக்கள் வேலைவாய்ப்பு
சேவைகள் நிலையம் - 2016.07.29



மாத்தறை பொதுமக்கள் வேலைவாய்ப்பு
சேவைகள் நிலையம் - 2016.12.10
தொழில் இல்லம் நிகழ்ச்சித்திட்டம்



பொலனறுவை - செப்டம்பர் 20 - 23 வரை
இளம் பட்டதாரிகளுக்கான தொழில்
வழிகாட்டல் நிகழ்ச்சிகள் (வெளிவாரி)





யாழ்ப்பாணம் - அக்டோபர் 17 - 19 வரை
பெற்றோர்களுக்கான விளிப்புணர்வு நிகழ்ச்சிகள்



தொழில் சவாலை வெற்றி
கொள்ளல் நிகழ்ச்சி
ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகம் -
2016.11.21



கிளிநொச்சி - 2016.10.04

## මිනිස්බල හා රැකීරක්‍ෂා දෙපාර්තමේන්තුව
## மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்
## Department of Manpower & Employment

2010.02.12 දිනැති අංක 1640/31 දරණ අතිවිශේෂ ගැසට් පත්‍රයේ විධිවිධාන අනුව මිනිස්බල හා රැකීරක්ෂා දෙපාර්තමේන්තුව 2010 වසරේදී කම්කරු සබඳතා හා මිනිස්බල අමාත්‍යාංශය යටතේ ස්ථාපනය කරන ලදි. වර්තමානයේ කම්කරු හා වෘත්තීය සමිති සබඳතා අමාත්‍යංශය යටතේ ක්‍රියාත්මක වන දෙපාර්තමේන්තුව වෙත රාජ්‍ය රැකියා සේවාවන් පවත්වාගෙන යාම හා ජාතික මානව සම්පත් හා රැකියා ප්‍රතිපත්තියේ විධිවිධාන ක්‍රියාත්මක කිරීමේ වගකීම ද පැවරී ඇත.

2010 பெப்ரவரி 12 ஆம் திகதி 1640/31 ஆம் இலக்க அதி விசேட வர்தமானி அறிக்கை மூலம் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம் 2010 ஆம் ஆண்டில் தொழில் தொடர்வுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தொழிலாளர் மற்றும் தொழில் சங்கம் உறவுகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களத்திடம் அரச தொழில் சேவைகள் நடாத்திப் போகுதல் மற்றும் தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்கொள்கைகளின் ஏற்பாடுகள் செயற்படுத்தும் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

Department of Manpower and Employment was established with effected from 1st January 2010 under the Ministry of Labour Relations and Manpower, in terms of the special Gazette Extraordinary no 1640/30 on 12th February 2010 and conveyed the responsibilities to implement the provisions of National human resource & job policies and conducting State job servicers to the Department which is operating under the Ministry of Labour and Union affairs in present.

PRINTEC - 0112 815 816

**Department of Manpower & Employment,**
9th Floor, Sethsirirpaya (Second Phase),
Battaramulla.